TNVR1E0002752025

**<u>சார்பு நீதிமன்றம், சாத்தூர்</u>**

**முன்னிலை** – திரு.S.முத்து மகாராஜன், **M.A.,L.L.M.,**

சார்பு நீதிபதி, சாத்தூர்

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 100 / 2025</u>**

CNR No.TNVR1E0002752025

-------

தவசிராஜ் .. வாதி

– எதிர் –

1. K. பாப்பா
2. சசிரேகா .. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 30.06.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருN.தனராஜ் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

பிராது தபசில் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் 1/3 பாகத்தை வாதிக்கு பிரித்துதர முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும், தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகள் எவ்வித

வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும் வழக்கின் செலவு தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பு வழக்குரை சுருக்கம் :–

2.1. பிராது தபசில் சொத்துக்கள் கோட்டியப்ப நாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். கோட்டியப்ப நாயக்கர் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 1995 ஆம் ஆண்டு அவரது வாரிசுகளான சின்னச்சாமி, பாப்பா மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலம் சென்றுவிட்டார். 1ம் பிரதிவாதி பாப்பா வாதியின் தகப்பனார் ஆவார். 2ம் பிரதிவாதி சசிரேகா வாதியின் உடன்பிறந்த சகோதரி ஆவார். கோட்டியப்ப நாயக்கரின் வாரிசுகளான சின்னச்சாமி, பாப்பா மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்கள் கடந்த 24.04.2002 தேதியில் சாத்தூர் சார்பதிவக ஆவண எண்.2074/2002ன் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்படி பாகப்பிரிவினையின் படி B ஷெட்யூல் சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பாப்பா பாகமாக ஒதுக்கப்பட்டது.

2.2. அதன்பின்னிட்டு வாதியும், பிரதிவாதிகளும் எவ்வித இடையூறும் இன்றி பிராது தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருகின்றனர். வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் கூட்டு பங்குரிமையாளர்களான வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவருக்கும் தபசில் சொத்துக்களில் 1/3 பங்கு உள்ளது. இந்நிலையில் 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சி செய்து வந்தார். தபசில் சொத்துக்களில் வாதிக்கு 1/5 பங்கு உள்ளதால், தபசில் சொத்துக்களை 3

பங்காக பிரித்து அதில் வாதிக்குரிய பாகத்தை பிரித்து தர கேட்டு, 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றும், அதில் வாதிக்கு எந்தவித பங்கு, பாகமும் கிடையாது என பாகம் பிரித்து தர மறுத்துவிட்டதால், வாதியால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைப்படுத்தப்பட்டு, தோன்றாத்தரப்பினராக பாவிக்கப்பட்டுள்ளனர்.

4. இந்த அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி கோரியுள்ள முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கு செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கத் தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. வாதி தரப்பில் வாசா.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு வாசாஆ.1 முதல் வாசா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதால், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**பிரச்சினைக்கு தீர்வு :–**</u>

6. வாதி தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. தாவா வழக்கை வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி, வாதியின் தகப்பனார் என்றும், 2ம்

பிரதிவாதி வாதியின் சகோதரி என்றும் வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதியின் தாத்தா கோட்டியப்ப நாயக்கர்க்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், மேற்படி கோட்டியப்ப நாயக்கர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான சின்னசாமி, 1ம் பிரதிவாதி பாப்பா மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்கள் சேர்ந்து கோட்டியப்ப நாயக்கரின் சொத்துக்களை பொறுத்து 24.04.2002ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றும், அதில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதனடிப்படையில் 1ம் பிரதிவாதியும், வாதி மற்றும் 2 ம் பிரதிவாதியும் சேர்ந்து மேற்படி பூர்விக சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும், அதனடிப்படையில் வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**7.** இந்த வழக்கில் பிரதிவாதிகள் இருவரும் ஆஜராகவில்லை. அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் அனைத்தும் 24.04.2002ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என குறிப்பிட்டுள்ளார். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் 1ம் பிரதிவாதிக்கு "B" Schedule ல் கண்ட 11 இலக்க சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 4வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்தாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 11 இலக்க சொத்துக்களையும் அதில் கண்டுள்ளவாறே வாதி இந்த வழக்கின் தபசில் சொத்துக்களாக காட்டவில்லை. மாறாக மேற்படி 11இலக்க சொத்துக்களில் 4 இலக்க

சொத்தை மட்டும் தாவா தபசில் 3,5,6 மற்றும் 7 ஆக காட்டப்பட்டுள்ளது. தாவா தபசில் 1,2,4 மற்றும் 8 சொத்துக்கள் மேற்படி வா.சா.ஆ.1ல், 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களாக காணப்படவில்லை.

**8.** மேலும், தாவா தபசில் 3, 5, 6 மற்றும் 7 சொத்துக்களின் விஸ்தீரணமும் வா.சா.ஆ.1ல் கண்ட விஸ்தீரணமும் முற்றிலும் முரண்பட்டு வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. தபசில் 1, 2, 4 மற்றும் 8 சொத்துக்களின் பட்டா வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவை 1ம் பிரதிவாதியின் பெயரில் காணப்பட்டாலும், அது பூர்வீக சொத்துக்களாகவோ, அல்லது 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாகவோ வா.சா.ஆ.1ல் காணப்படவில்லை. தபசில் 1, 2, 4 மற்றும் 8 சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு பட்டாவை மட்டும் வைத்து முடிவு செய்ய இயலாது. மேலும் வா.சா.ஆ.7 வில்லங்க சான்றிதழில் தபசில் சொத்துக்கள் அனைத்தும் வேறு வழக்குகளில் சம்மந்தப்பட்டு ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக காணப்படும் நிலையில் அது குறித்து எந்த சங்கதிகளும் பிராதில் இடம் பெறவில்லை.

**9.** வா.சா.ஆ.1ல் கண்ட 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து விபரங்களும், தாவா சொத்து விபரங்களும் ஒத்துப்போகாத நிலையிலும், வா.சா.ஆ.1ல், 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டாத சொத்துக்கள் பிராது தபசில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பிராதில் அது குறித்து எந்த விளக்கமும் கூறப்படாத நிலையிலும், தபசில் சொத்துக்கள் குறித்து நீதிமன்ற ஜப்தி வா.சா.ஆ.7ல் காணப்படும் நிலையில் அது குறித்த சங்கதிகளை பிராதில் குறிப்பிடப்படாத நிலையிலும், தாவா தபசில் 1,2,4 மற்றும் 8 சொத்துக்கள்

பூர்வீக சொத்துக்கள் என வாதி தரப்பில் நிரூபிக்கபடாத நிலையிலும், தாவா 5வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்தாக காணப்படும் நிலையிலும் வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,**

i) இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது;

ii) செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்த பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 09ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**(ஒம்/–எஸ்.முத்துமகாராஜன்)**
சார்பு நீதிபதி,
சாத்துார்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>**

வா.சா.1 -- தவசிராஜ் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| வ.எண். | நாள் | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.04.2002 | கோட்டியப்ப நாயக்கர் வாரிசுகளுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 13.10.2025 | 1ம் பிரதிவாதி பாப்பா பெயரில் உள்ள நத்தம் பட்டா (பட்டா எண்.288) | இணைய நகல் |
| வா.சா.ஆ.3 | 23.08.2025 | 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள நத்தம் பட்டா (பட்டா எண்.287) | இணைய நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | 23.08.2025 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.820) | இணைய நகல் |
| வா.சா.ஆ.5 | 13.10.2025 | புஷ்பராஜ் மற்றும் பாப்பா பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.976) | இணைய நகல் |
| வா.சா.ஆ.6 | 23.08.2025 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.980) | இணைய நகல் |
| வா.சா.ஆ.7 | 25.08.2025 | வில்லங்கசான்றிதழ் | இணைய நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** **—இல்லை—**

**(ஒம்/—எஸ்.முத்துமகாராஜன்)**
சார்பு நீதிபதி,
சாத்துூர்.

**/உண்மை நகல்/**

MUTHUMAHARAJAN S

Digitally signed by MUTHUMAHARAJAN S
Date: 2026.07.09 17:18:13 +0530

சார்பு நீதிபதி,
சாத்துூர்.

சார்பு நீதிமன்றம், சாத்தூர்.
அ.வ.எண்.100/2025
தீர்ப்புரை
நாள் : 09.07.2026

**Subordinate Court, Sattur.**